RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
## MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 314 | நவம்பர்.14 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5


# டெல்லி குண்டுவெடிப்பு எதிரொலி: காஷ்மீரில் 13 இடங்களில் உளவுப்பிரிவு போலீஸார் சோதனை

ஸ்ரீநகர்: நவ.14-

டெல்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பு தொடர்பாக காஷ்மீரில் 13 இடங்களில் பயங்கரவாத தடுப்பு உளவுப் பிரிவு போலீஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

கடந்த 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதல் தொடர்பாக முதலில் டெல்லி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்த நிலையில், இந்த வழக்கு விசாரணையை தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ)க்கு மாற்றி மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டது. இதையடுத்து, என்ஐஏ டைரக்டர் ஜெனரல் விஜய் சகாரே தலைமையில் 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த குண்டுவெடிப்புக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள மத்திய அமைச்சரவை, இது ஒரு தீவிரவாத தாக்குதல் என அறிவித்துள்ளது. இந்த தாக்குதலில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தப்ப முடியாது என பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் உறுதி அளித்துள்ளனர். இந்த தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் ஆதரவு தீவிரவாத அமைப்பான ஜெய்ஷ் இ முகமது இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.



ஒயிட் காலர் தீவிரவாதம் எனக் குறிப்பிடப்படும் இதில், நன்கு படித்தவர்கள், வசதியான பின்னணி கொண்டவர்கள் ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளது. கடந்த ஜனவரி 26ம் தேதி குடியரசு தினத்தன்று டெல்லி செங்கோட்டையில் தாக்குதல் நடத்த இவர்கள் திட்டமிட்டுள்ளனர். எனினும், பாதுகாப்பு வலுவாக இருந்ததால் இவர்களால் அதை மேற்கொள்ள முடியவில்லை. எனினும், கடந்த 2008ல் மும்பையில் நடந்த தாக்குதலை போல டெல்லியில் பல இடங்களில் தீவிரவாத தாக்குதல்களை நடத்த இவர்கள் திட்டமிட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதற்கான பணியில் 8 பேர் ஈடுபட்டதாகவும், 4 இடங்களில் குண்டுவெடிப்புகளை நிகழ்த்த திட்டமிட்டதாகவும், ஒவ்வொரு குண்டுவெடிப்புக்கும் இருவர் பொறுப்பேற்று செயல்பட்டதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கார் குண்டுவெடிப்பை நிகழ்த்திய உமர் முகமது நபி, ஃபரிதாபாத்தில் உள்ள அல் ஃபலா மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் மருத்துவராக பணியாற்றி வந்துள்ளார். டெல்லி குண்டுவெடிப்பில் உடல் சிதறி உயிர் இழந்தது இவர்தான் என டிஎன்ஏ சோதனை மூலம் போலீஸார் உறுதிப்படுத்தி உள்ளனர். இவரது நெருங்கிய நண்பர்களான மருத்துவர் முஜம்மில் ஷகில், மருத்துவர் அதில் அகமது ராதர் ஆகியோரை பாதுகாப்புப் படையினர் கைது செய்து அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் அளித்த தகவல்களின் பேரில் மேலும் பலரை தேடி வருகின்றனர்.

இதனிடையே, உமர் முகமது நபி மற்றும் முஜம்மில் ஷகில் ஆகியோரின் டைரிகளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர். நவம்பர் 8 முதல் 12க்குள் தாக்குதலை நடத்த திட்டமிட்டது குறித்து டைரியில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அதில் சுமார் 25 நபர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். மேலும், அல் ஃபலா பல்கலைக்கழகத்தில் இருந்து 300 மீட்டர் தொலைவில் வெடிபொருட்களை பதுக்கி வைத்திருந்த இடத்தில் இருந்து முஜம்மில் ஷகிலின் மற்றொரு டைரி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

டைரிகளில் குறியீட்டு வார்த்தைகள் உள்ளதாகவும் அவற்றை புலனாய்வு அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். குண்டுவெடிப்புக்கு ஹூண்டாய் ஐ20 காரோடு EcoSport என்ற மற்றொர காரையும் இவர்கள் பயன்படுத்தி உள்ளனர். அதோடு, குண்டுவெடிப்புக்கு ஏற்ற வகையில் மேலும் இரண்டு வாகனங்களை வடிவமைக்கவும் இவர்கள் திட்டமிட்டிருந்தது தற்போது தெரிய வந்துள்ளது.





■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில் சிவகங்கை மறைமாவட்ட பேராயர் டாக்டர் லூர்து ஆனந்தம் அவர்கள் மற்ற பேராயர்களுடன் இணைந்து சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பின்போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ். எம். நாசர், சட்டமன்ற உறுப்பினர் திரு. இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை ஜோ அருண் ஆகியோர் உடனிருந்தனர்.



■ நெடுஞ்சாலைத்துறை இயக்குநர் சென்னை அவர்களால் வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட ஆய்வின் போது கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப, சிவகங்கை, கோட்டப் பொறியாளர் (நெ) தரக்கட்டுபாடு மதுரை மற்றும் களப் பணியாளர்கள் உடனிருந்தனர். மேலும் இராமநாதபுரம் மேலூர் சாலையில் உள்ள மேம்பாலங்கள் மற்றும் சிறுபாலங்களில் நீர்வழித்தடங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

# செல்ஃபோன் பயன்பாட்டால் இளம் வயதினருக்கு அதிகரிக்கும் சர்க்கரை நோய் மதுரை ஆய்வு சொல்வது என்ன?

மதுரை, நவ.14-

வெளி விளையாட்டு, நடைபயிற்சி இல்லாமல் இருப்பது, அதிக நேரம் தொலைக்காட்சி மற்றும் செல்போன் பயன்பாட்டால் வளர் இளம் பருவத்தினரிடைய சர்க்கரை நோய் அதிகரித்து வருவதாக மதுரை அரசு மருத்துவமனை நிபுணர்கள் நடத்திய ஆய்வில் தெரிய வந்தது.




தென் தமிழகத்திலேயே மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் முதன் முதலாக சர்க்கரை நோய் சிகிச்சைக்காக தனித்துறை தொடங்கி சிகிச்சை வழங்கப்படுகிறது. அனைத்து வகையான சர்க்கரை நோய்க்கும் சிகிச்சை அளிக்கும் விதமாக, இந்த சிகிச்சைப் பிரிவில் இளஞ்சிறார் டைப் 1 சர்க்கரை நோய் சிகிச்சைப் பிரிவு, கர்ப்பகால சர்க்கரை சிகிச்சைப் பிரிவு, டைப் 2 சர்க்கரை நோய் சிகிச்சைப் பிரிவு, சர்க்கரை கால் பாத கவனிப்பு பிரிவு போன்றவை செயல்படுகிறது. தற்போது 75 ஆயிரம் பேர் பதிவு செய்து சர்க்கரை நோய் சிறப்பு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

கரோனா தொற்றுக்கு பிறகு வளர் இளம் பருவ சர்க்கரை நோய் பாதிப்பு கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட அதிகரித்துள்ளது. இந்த வளர் இளம் பருவ உடல் பருமன் மற்றும் சாக்கரை நோய் பாதிப்பு, பள்ளி செல்லும் சிறுவர், சிறுமியரிடம் எவ்வாறு ஏற்படுகிறது என்பதை மருத்துவ நிபுணர்கள் கள மருத்துவ ஆய்வு செய்துள்ளனர்.

இதற்காக மதுரை சுற்றுப்புறங்களில் உள்ள நகர் மற்றும் ஊரக பள்ளிச் சிறார்கள் 10 முதல் 18 வயது வரை நகர்புற பள்ளிகளில் 1,631 பேர், ஊரகப் பகுதி பள்ளிகளில் 1,564 பேர் என மொத்தம் 3,195 பேர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். இதில் நகர்ப்புற பகுதியில் 8.8 சதவீதம் பேரும், ஊரகப் பகுதியில் 7.6 சதவீதம் பேரும் உடல் பருமன் பாதிப்பு கண்டறியப்பட்டது. இவர்களுக்கு உயர் இரத்த சர்க்கரை அளவு கண்டறியப்பட்டது. இதில் 2 சதவீதம் பேர் முற்றிலும் சர்க்கரை நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த உடல் பருமன் உள்ள பள்ளி மாணவர்களில் சுமார் 40 சதவீதம் பேரிடம் கல்லீரல் கொழுப்பு அதிகம் காணப்பட்டது. 34 சதவீதம் பேரிடம் ரத்த அழுத்தம் அதிகரித்து இருந்தது. 20 சதவீதம் பேரிடம் உயர் சதவீதம் கொலஸ்ட்ரால் அளவு கண்டறியப்பட்டது. உடல் பருமனான மாணவிகளிடையே சினைப்பை நீர்க்கட்டிகள் கண்டறியப்பட்டன.

இவை அனைத்துக்கும் அடிப்படை காரணிகளாக உயர் கலோரி நொறுக்குத் தீனிகள், வெளி விளையாட்டு, நடைப் பயிற்சி இல்லாமல் இருப்பது, அதிக நேரம் தொலைக்காட்சி மற்றும் செல்போன் பயன்பாடு, அதிக பிறப்பு எடை, பெற்றோரிடம் சர்க்கரை நோய் ஆகியவையே காரணம் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# அமெரிக்காவில் 43 நாட்கள் நீடித்த நிதி முடக்கம் முடிவுக்கு வந்தது: மசோதாவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

வாஷிங்டன், நவ.14-

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் புதன்கிழமை (நவம்பர் 12) இரவு அரசாங்க நிதி மசோதாவில் கையெழுத்திட்டார். இது 43 நாட்களாக நீடித்த அரசின் நிதி முடக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அமெரிக்க நிதியாண்டு செப்டம்பர் 30ல் முடிவடையும். அக்.1ல் புதிய நிதியாண்டு தொடங்கும். இதனையடுத்து ஆண்டுதோறும் புதிய நிதியாண்டுக்கான பட்ஜெட் மசோதா செப்.30ல் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். அமெரிக்க அரசு இயங்கத் தேவையான ஆண்டு செலவின மசோதாவுக்கு இந்த இரு அவைகளின் உறுப்பினர்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக, 60 சதவீத செனட் உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால் மட்டுமே, அரசின் செலவினங்களுக்கான நிதி விடுவிக்கப்படும். இந்நிலையில், அக்.1 அமெரிக்க நாடாளுமன்றத்தில் 60% உறுப்பினர்களின் ஒப்புதல் கிடைக்காததால் நிதி மசோதா தோல்வியடைந்தது. இதனால் அமெரிக்க அரசு எதிர்கொண்ட நிதி முடக்கம் 43 நாட்களாக நீடித்தது.

இந்த நிதி முடக்கத்தால் அமெரிக்காவில் ராணுவம், எல்லை பாதுகாப்புப் படை, விமானக் கட்டுப்பாட்டுத் துறை உள்ளிட்ட சில அத்தியாவசிய துறைகள் மட்டுமே இயங்கியது. மற்ற துறைகளின் அரசு ஊழியர்கள் பணிபுரியவில்லை, அதுபோல அரசு ஊழியர்களுக்கு ஊதியமும் வழங்கப்படவில்லை.



இந்தச் சூழலில் சில ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களின் ஆதரவுடன், செனட் சபையில் நிதி மசோதா நேற்று நிறைவேறியது. இந்த மசோதாவுக்கு ஆதரவாக 222 வாக்குகளும், எதிராக 209 வாக்குகளும் பதிவானது. மசோதா நிறைவேறிய இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு கையெழுத்திடும் விழா நடந்தது.

மசோதாவில் கையெழுத்திடும் முன்பு பேசிய ட்ரம்ப், “இன்று நாங்கள் மிரட்டிப் பணம் பறிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்ற தெளிவான செய்தியை சொல்லியுள்ளோம். நான் அமெரிக்க மக்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன், நீங்கள் இதை மறந்துவிடக் கூடாது. இடைக்காலத் தேர்தல்கள் வரும்போது ஜனநாயக கட்சியினர் நம் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.” என்றார்.

இந்த மசோதா ஜனவரி 30ம் தேதி வரை அரசுக்கான நிதியுதவியை நீட்டிக்கும். இதனால் அரசின் அத்தனை துறைகளும் இனி செயல்பட ஆரம்பிக்கும். அனைத்து அரசு ஊழியர்களும் பணிக்கு திரும்புவார்கள், அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படும்.

# பூவந்தி அருகே போலீஸ் ஜீப் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்த நிலையில், ஓட்டுநர் பாலமுருகன் மீது மூன்று பிரிவின் கீழ் பூவந்தி போலீசார் வழக்குப்பதிவு

சிவகங்கை, நவ.14-

சிவகங்கை மாவட்டம் பூவந்தி அருகே அனஞ்சியூர் விலக்கு பகுதியில் மதுரையில் இருந்து ராமநாதபுரம் நோக்கி சென்ற போலீஸ் ஜீப் எதிரே மதுரை நோக்கி வந்த இருசக்கர வாகனத்தில் மோதிய விபத்தில் பிரசாத், சத்தியா, அஸ்வின் ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தும், சோனைஈஸ்வரி என்ற பெண்மணி காயமடைந்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இறந்தவரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து போலீஸ் ஜீப் ஓட்டுனர் பாலமுருகன் மீது பூவந்தி காவல் நிலைய போலீசார் 281, 125, 106 1 என மூன்று பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.






இறந்தவர்களின் உடல்கள் மதுரை அரசு மருத்துவமனையில் உடற்கூறு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ள நிலையில், தகவல் அறிந்த தமிழக முதல்வர் முக. ஸ்டாலின் உயிரிழந்த குடும்பத்திற்கு தலா ரூ 3 லட்சமும், காயமடைந்தவருக்கு ரூ 1 லட்சம் என நிவாரணம் வழங்க உத்தரவிட்டார். இந்நிலையில் இச்சசம்பவத்தில் ஈடுபட்ட ராமநாதபுரம் மாவட்ட காவல் துறை போலீஸ் ஜீப் TN23 G 0787 என்ற வாகனம் கடந்த 3152010 அன்று சென்னையில் பதிவு செய்யப்பட்டு, அதன் இயக்க தகுதி நாள் கடந்த 3052025 அன்றுடன் நிறைவடைந்து காலாவதி ஆன நிலையில் இயங்கி வந்தது தெரிய வந்துள்ளது. மேலும் விபத்து காப்பீடும் கடந்த 1122018 அன்றுடன் நிறைவடைந்து உள்ளதும் தெரியவந்துள்ளது. இதன் மூலம் விபத்து மற்றும் தகுதிச் சான்றிதழ் இல்லாமல் காவல்துறை வாகனம் இயங்கியது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதுபோல் தமிழகத்தில் எத்தனை அரசு வாகனங்கள் இயக்க தகுதி நாள் நிறைவடைந்து, காலாவதி ஆகி உள்ளதை அரசு கணக்கெடுத்து அத்தகைய வாகனங்கள், பழுது பார்த்து இயக்க கூடிய வாகனங்களாக இருப்பின் அதற்கு மட்டும் தகுதி சான்றிதழ் மற்றும் காப்பீடு பெற்று இயக்க வேண்டுமெனவும் தகுதியற்ற வாகனங்கள் இயக்குவதற்கு தடை செய்ய வேண்டும் எனவும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் மக்களுக்கு முன்னுதாரனமாக திகழ வேண்டிய அரசு இவ்வாறு காலாவதியான வாகனங்களை இயக்குவதை தடை செய்ய வேண்டும் இல்லையேல் இதுபோல அப்பாவின் குடிமக்களின் உயிர்கள் பறிபோகும் நிலை ஏற்படும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, 25 “அன்புச் சோலை” மையங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

# வேலூர் மாவட்டத்தில் அன்புச்சோலை மையங்களில் தங்கி பயனடையும் மூத்த குடிமக்கள் தங்களுடைய மனம் நிறைந்துள்ளது என தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களுடைய நன்றியை தெரிவித்தனர்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 10.11.2025 அன்று திருச்சிராப்பள்ளி, பொன்மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக “அன்புச் சோலை” மையங்கள் ஒரு மாநகராட்சியில் இரண்டு வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள், சென்னை பெருநகராட்சியில் 3 மையங்கள் மற்றும் தொழில் மாவட்டங்களான இராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரியில் 2 மையங்கள் என மொத்தம் 25 “அன்புச் சோலை” மையங்களை தொடங்கி வைத்தார்கள்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலமாக குழந்தைகள், மகளிர், கல்வி பயிலும் மாணவ, மாணவியர், திருநங்கைகள் மற்றும் முதியோர் அனைவரையும் பேணிகாக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டங்கள் இத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. முதியவர்கள் அமைதியான, கண்ணியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை நடத்துவதை உறுதிசெய்து, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதே இத்திட்டங்களின் நோக்கம் ஆகும்.

மூத்த குடிமக்களுக்கான “அன்புச் சோலை” மையங்கள்

தமிழ்நாட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூத்த குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதற்காக ஒரு மாநகராட்சியில் இரண்டு அன்புச் சோலைகள் வீதம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் 20 அன்புச் சோலைகள் அமைக்கப்படுகின்றன. மேலும், 2 தொழில்துறை மாவட்டங்களான இராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரி, பெருநகர மாநகராட்சியான சென்னையில் தண்டையார்பேட்டை, சோழிங்கநல்லூர் மற்றும் விருகம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில் ‘’அன்புச்சோலை’’ மையங்கள் தொடங்கப்பட்டு, இயன்முறை மருத்துவ சேவைகள் (Physiotherapy), யோகா, பொழுதுபோக்கு அம்சங்கள் மற்றும் நூலகம் போன்றவை வழங்கப் படவுள்ளன.



அன்புசோலையின் முக்கிய நோக்கங்கள்

முதியோருக்கு வழங்கப் படும் இயன்முறை மருத்துவ சேவைகள், பொழுதுபோக்கு, திறன் மேம்பாடு நிகழ்வுகள் மூலம் மனமும், உடலும் சுறுசுறுப்புடன் இருக்கச் செய்தல், முதியோர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு, சமூக உறவுகளை வலுப்படுத்துதல், ஆண், பெண் இருவரும் வேலை பார்க்கும் குடும்பங்களுக்கு, அவர்களது மூத்த உறுப்பினர்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு அன்புச் சோலை மையங்கள் செயல்படும்.




அன்புசோலையின் சமூக நோக்கம்

அன்புச்சோலை திட்டமானது, முதியோர்களை போற்றும் தமிழ் பாரம்பரியத்தை பிரதிபலிப்பதோடு, முதியோர்களின் பாதுகாப்பையும், நன்முறையில் பராமரிப்பதையும் உறுதி செய்வதால் அவர்களது குடும்பத்தினருக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறது. இதனால் முழுமையான நிறுவனம் சார்ந்த பராமரிப்பு தேவையை குறைத்தும், குடும்ப பிணைப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது. மேலும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்கள், தங்கள் வீட்டிலுள்ள முதியோர்களை பகல் நேரங்களில் பராமரிக்க இயலாததால் வேலைக்கு செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, வேலைக்கு செல்லும் பெண்களுக்காகவும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்களுக்காகவும், அவர்களது வீட்டு முதியவர்களுக்கு தனிமையில்லாமல் நேரத்தை சிறந்த முறையில் செலவு செய்து, மகிழ்வாக வாழ வழிவகை செய்யும் நோக்கத்தோடும் இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதனை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் காட்பாடி வட்டம், சேனூர் கிராமத்தில் மாம் பவுண்டேஷன் (MOM FOUNDATON JABRAPET KATPADI ), வேலூர் மாநகராட்சி, சேண்பாக்கத்தில் குட் லைப் பவுண்டேஷன் (GOOD LIFE FOUNDATION SHENBAKKAM) ஆகிய இடங்களில் அன்புச்சோலை மையங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களால் காணோலி காட்சி வாயிலாக 10.11.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் அன்புச்சோலை மையங்கள் மூலம் பயனடையும் மூத்த குடிமக்கள் தெரிவித்ததாவது.

காட்பாடி வட்டம், சேனூர் இந்திரா நகர் பகுதியை சார்ந்த விஜயா தெரிவித்ததாவது.

வணக்கம் என்னுடைய பெயர் விஜயா. நான் காட்பாடி சேனூர் இந்திரா நகர் பகுதியில் வசித்து வருகிறேன். என்னுடைய மகன் மற்றும் மருமகளும் வேலைக்கு செல்வதால் நான் பகல் நேரங்களில் தனியாக உள்ளேன். ஆகையால் பகல் நேரங்களில் என்னை அரசு புதிதாக தொடங்கியுள்ள இந்த மையத்தில் விட்டு செல்கின்றனர். இந்த மையத்தில் என்னை போன்ற நிறைய பேர் இருக்கிறார்கள். பின்னர் மாலை என் மகன் மற்றும் மருமகளும் வீட்டிற்கு அழைத்து செல்கிறார்கள்.




அனைத்து தரப்பு மக்களுக்கும் எண்ணற்ற நல்ல பல உதவிகளை செய்து வருகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முதியோர்களின் நலனிலும் அக்கறை கொண்டு இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். என்னை போன்ற அனைத்து முதியோர்கள் சார்பிலும் , என்னுடைய சார்பாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்பாடி வட்டம், ஜாப்ராபேட்டை பகுதியை சார்ந்த சௌந்தர், தெரிவித்ததாவது.

வணக்கம் என்னுடைய பெயர் சௌந்தர். நான் காட்பாடி ஜாப்ராபேட்டை பகுதியில் என் மகனுடன் வசித்து வருகிறேன். என் மகன் பகல் நேரத்தில் வேலைக்கு செல்வதால் நான் தனியாக உள்ளதால் என்னால் பகல் பொழுது மகிழ்ச்சியாக இல்லாமல் இருந்தது.




தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கியுள்ள அன்புச்சோலை முதியோர் இல்லத்தில் பகல் நேரங்களில் தங்குகிறேன். இங்கு மருத்துவ உதவிகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள், படிப்பதற்கு நல்ல பல நூல்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அனைவரிடத்திலும் அன்பும், நேசமும் கொண்டு இந்த அன்புச்சோலை இல்லத்தை திறந்தமைக்கு அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.

## 15.11.2025 அன்று பைங்குளம் ஏ.பி.டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நடைபெறவுள்ளது

பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா வேண்டுகோள்



கன்னியாகுமரி, நவ.14-

கன்னியாகுமரி மாவட்டம் பைங்குளம் ஏ.பி.டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் 15.11.2025 அன்று நடைபெறவுள்ள நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாட்டை நோயில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமினை தமிழ்நாடு முழுவதும் 02.08.2025 அன்று சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள்.

இம்முகாமில் சிறந்த மருத்துவர்களை வைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் கண்டிப்பாக தங்களது முழு உடலை பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு, அட்டை பெற்ற நபர்களுக்கு, இம்முகாமில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் முகாமில் ஆண்கள், பெண்கள், கர்ப்பிணிகள் (மகப்பேறு) என மூன்றாக பிரிக்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிட்சை, எலும்பு முறிவு மருத்துவம், பேறுகால மருத்துவம், குழந்தை நல மருத்துவம், இதயநல சிறப்பு மருத்துவம், நரம்பியல் சிறப்பு மருத்துவம், நுரையீரல் சிறப்பு மருத்துவம், நீரிழிவு நோய்கான சிறப்பு மருத்துவம், தோல் சிறப்பு மருத்துவம், பல் மருத்துவம், கண் சிறப்பு மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், இயற்கை மருத்துவம், உணவியல் ஆலோசணை உள்ளிட்ட ஆகிய 17 சிறப்பு மருத்துவ சிகிட்சை, சிறப்பு மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட உள்ளது. தொடர்ந்து முதல்வரின் விரிவான காப்பீடு திட்ட அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது.

அதனடிப்படையில் வரும் (சனிக்கிழமை) 15.11.2025 புதுக்கடை பேரூராட்சி மற்றும் பைங்குளம், விளாத்துறை, முஞ்சிறை ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பைங்குளம் ஏ.பி.டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறவு ள்ளது. எனவே பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிக்கு அருகாமையில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் - முழு உடல் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர்.அழகுமீனா, தெரிவித்துள்ளார்கள். நடைபெற்ற ஆய்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அரவிந்த் ஜோதி, முகாம் ஒருங்கிணைப்பாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.





## பம்மல் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது

பம்மல், நவ.14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி உட்பட்ட பம்மல் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் அவசர செயற்குழு கூட்டம் எஸ்எஸ் மகாலில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர், தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் மேலும் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், பிஎல்ஏ2 பிடிஏ2 மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் இக் கூட்டத்தில் எஸ்ஐஆர் பற்றிய ஆலோசனைகளையும் ஆற்ற வேண்டிய பணிகளைக் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார்கள்

## மேகேதாட்டு குறித்த கர்நாடக முதல்வர் கருத்துக்கு திமுக அரசு வாய் திறக்காதது ஏன்? - ஓபிஎஸ் கேள்வி

சென்னை, நவ.14-

‘முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காவிரியில் மேகேதாட்டு அணையால் தமிழகத்துக்குப் பாதிப்பு இல்லை என்று கர்நாடக முதல்வர் கூறியிருப்பது கேலிக்கூத்தாக உள்ளது. கர்நாடக முதல்வரின் கருத்து தமிழகத்தைப் பாலைவனமாக்க வழிவகுக்கும். இதன்மூலம், உபரி நீரையும் தமிழகத்துக்கு தரக்கூடாது என்ற கர்நாடக அரசின் தீய எண்ணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேகேதாட்டு அணையை கர்நாடக அரசு கட்டினால், தமிழகத்துக்கு வரும் உபரி நீரும் நின்றுவிடும். இந்தத் திட்டம் கர்நாடகத்துக்கு மட்டும்தான் பயனளிக்கும். எனவே, மேகேதாட்டு அணை திட்டத்தால் தமிழகத்துக்கு பாதிப்பு இல்லை என்ற கூற்று கடும் கண்டனத்துக்குரியது. இதுகுறித்து திமுக அரசு வாய் திறக்காமல் இருப்பது ஏன்? உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேகேதாட்டு அணை குறித்து உண்மைக்குப் புறம்பான கருத்துகள் கூறுவதை கர்நாடக முதல்வர் இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





## மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் ஊரக வளர்ச்சி துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம்

கடலூர், நவ.14-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் ஊரக வளர்ச்சி துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஊரக மக்களின் நலன் கருதியும், கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், நகர்ப்புறங்களுக்கு இணையாக அனைத்து வசதிகளையும் கிராமங்களில் ஏற்படுத்திடும் வகையிலும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

இக்கூட்டத்தில் ஊரகப்பகுதியில் உள்ள குடிசைகளை மாற்றி, அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகளை அமைத்து தரும் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மற்றும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், இதுவரை இத்திட்டங்களின் கீழ் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் நிலை, வெவ்வேறு நிலைகளிலுள்ள வீடு கட்டுமானப் பணிகளின் நிலை குறித்தும் கேட்டறியப்பட்டது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், குழந்தை நேய பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம், 15வது நிதி குழு மான்யம், தூய்மை பாரத இயக்கத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வாயிலாக கிராம ஊராட்சிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு தேவைகளான சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு, கிராம ஊராட்சிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல், திட, திரவ கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரப் பணிகள், கிராமப்புற நூலகம் அமைத்தல், பழுதடைந்த அங்கன்வாடி மைய கட்டடங்களை சீரமைத்தல், விளையாட்டு மைதானம் அமைத்தல், சுடுகாடு வசதிகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கிராமப்புறங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் உள்ளிட்ட அனைத்துத் திட்டப்பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

கூட்டத்தின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சித்துறை) வரதராஜபெருமாள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோயம்புத்தூர் மாவட்டம்: சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக "அன்புச் சோலை" மையங்கள் மூலம் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சருளுக்கு நிறைந்த மனதுடன் நன்றியினை தெரிவித்தனர்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலமாக குழந்தைகள், மகளிர், கல்வி பயிலும் மாணவ, மாணவியர், திருநங்கைகள் மற்றும் முதியோர் அனைவரையும் பேணிகாக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டங்கள் இத்துறையின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. முதியவர்கள் அமைதியான, கண்ணியமான மற்றும் நிறைவான வாழ்க்கையை நடத்துவதை உறுதிசெய்து, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதே இத்திட்டங்களின் நோக்கம் ஆகும்.

முதியோருக்கு வழங்கப்படும் இயன்முறை மருத்துவ சேவைகள், பொழுதுபோக்கு, திறன் மேம்பாடு நிகழ்வுகள் மூலம் மனமும், உடலும் சுறுசுறுப்புடன் இருக்கச் செய்தல், முதியோர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு, சமூக உறவுகளை வலுப்படுத்துதல், ஆண், பெண் இருவரும் வேலை பார்க்கும் குடும்பங்களுக்கு, அவர்களது மூத்த உறுப்பினர்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவதை உறுதி





செய்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு அன்புச் சோலை மையங்கள் செயல்படும்.

அன்புச்சோலை திட்டமானது, முதியோர்களை போற்றும் தமிழ் பாரம்பரியத்தை பிரதிபலிப்ப தோடு, முதியோர்களின் பாதுகாப்பையும், நன்முறையில் பராமரிப்பதையும் உறுதி செய்வதால் அவர்களது குடும்பத்தினருக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறது. இதனால் முழுமையான நிறுவனம் சார்ந்த பராமரிப்பு தேவையை குறைத்தும், குடும்ப பிணைப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது.

மேலும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்கள், தங்கள் வீட்டிலுள்ள முதியோர்களை பகல் நேரங்களில் பராமரிக்க இயலாததால் வேலைக்கு செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, வேலைக்கு செல்லும் பெண்களுக்காகவும், வேலைக்கு செல்ல ஆர்வமுள்ள பெண்களுக்காகவும், அவர்களது வீட்டு முதியவர்களுக்கு தனிமையில்லாமல் நேரத்தை சிறந்த முறையில் செலவு செய்து, மகிழ்வாக வாழ வழிவகை செய்யும் நோக்கத்தோடும் இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 10112025 அன்று மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, தொடங்கி வைத்தார்கள். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக "அன்புச் சோலை" மையங்கள் ஒரு மாநகராட்சியில் இரண்டு வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள், சென்னை பெருநகராட்சியில் 3 மையங்கள் மற்றும் தொழில் மாவட்டங்களான இராணிப்பேட்டை மற்றும் கிருஷ்ணகிரியில் 2 மையங்கள் என மொத்தம் 25 "அன்புச் சோலை" மையங்களை தொடங்கி வைத்தார்கள்.




கோயம்புத்தூர் மாவட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக கீரணத்தம் பிரபஞ்சம் அமைதி அறக்கட்டளை மற்றும், மேட்டுப்பாளையம், கோஆப்ரேட்டிவ் காலனி, விழுதுகள் அறக்கட்டளை ஆகிய 2 இடங்களில் "அன்புச் சோலை" மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.



கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீரணத்தம் அன்புச் சோலை மையத்தில் உள்ள சரவணம்பட்டி வி.எஸ் நகர் பகுதியை சேர்ந்த . அனுராதா (வயது 61) தெரிவித்ததாவது,

என் பெயர் அனுராதா. நான் சரவணம்பட்டியிலிருந்து இங்கு வந்துள்ளேன். எனக்கு 61 வயது ஆகின்றது. வீட்டில் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் வேலைக்கு சென்ற பிறகு நான் மட்டும் தனியாக இருப்பேன். ஆனால் இன்று அன்புசோலையில் என்னை போன்ற வயதானவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடன் பேசுவது மட்டுமல்லாமல் சிறு சிறு விளையாட்டுகளுடன் என்னுடைய பொழுதை கழித்தபோது, தனிமை மறந்து இங்கு மிகவும் சந்தோஷமாக இருந்தேன். நல்ல உணவினை காலையிலும் மதியத்திலும் வழங்கினார்கள். இதன் மூலம் என்னுடைய மனதிற்கும், உடலுக்கும் மிகவும் புத்துணர்ச்சியாக இருந்தது. இனி தினந்தோறும் இங்கு வருவேன். தனிமையில் இருக்கின்றோம் என்ற உணர்வே இருக்காது. என்போன்ற வயதனவர்களின் நலனை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.



கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீரணத்தம் அன்புச் சோலை மையத்தில் உள்ள சரவணம்பட்டி பகுதியை சேர்ந்த நாகராஜ் (வயது 61) தெரிவித்ததாவது,

என் பெயர் நாகராஜ். நான் சரவணம்பட்டி, ஐடி பெட்ரோல் பங்க் பகுதியிலிருந்து இங்கு வந்துள்ளேன். எனக்கு 61 வயது ஆகின்றது. வீட்டில் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் வேலைக்கு சென்ற பிறகு நான் மட்டும் தனியாக இருப்பேன். ஆனால் அன்புசோலையில் என்னை போன்ற வயதானவர்கள் இருக்கின்றார்கள். தற்போது இந்த முகாமில் பல்வேறு பகுதியிலிருந்து வரும் முதியவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பதாலும் ஒத்த வயதிலும் இருப்பதாலும் மனம் விட்டு பேச முடிகிறது. அவர்களுடன் பேசியது மட்டுமல்லாமல் தினசரி நாளிதழ் வாசித்து, கேரம் விளையாடி என்னுடைய பொழுதை கழித்தபோது, தனிமை மறந்து இங்கு மிகவும் சந்தோஷமாக இருந்தேன்.

நல்ல உணவினை காலையிலும் மதியத்திலும் வழங்கினார்கள். இனி தினந்தோறும் இங்கு வருவேன். அன்புச்சோலை முதியோர் மனம் மகிழ்ம் வகையில் வள மையமாக ஆறுதலை தந்துள்ளது இங்கு இருக்கும்போது மிகவும் மகழ்ச்சியாக இருப்பதுபோல் உணர்ந்தேன். என்போன்ற வயதனவர்களின் நலனை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

**தொகுப்பு: ஆ.செந்தில் அண்ணா செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இரா.சரண் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கோயம்புத்தூர் மாவட்டம்.**



மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,

## வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான கணக்கீட்டு படிவம் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கி வருவதை பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம், நவ.14-

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் மற்றும் கடலாடி வட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர் பான கணக்கீட்டு படிவம் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கி வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் முதுகுளத்தூர்; வட்டம், முதுகுளத்தூர், காக்கூர் மற்றும் தேரிருவேலியில் வாக்காளர்களின் வீடுகளுக்கு சென்று கணக்கீட்டு படிவம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழங்கி வருவதை பார்வையிட்டதுடன், மாவட்ட ஆட்சித்தலைவர் வாக்காளர்களிடம் கணக்கீட்டு படிவம் பதிவு செய்து வழங்குவதன் விவரம் குறித்து கேட்டறிந்ததுடன், படிவம் பெற்ற வாக்காளர்கள் விரைவாக பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் திரும்ப வழங்க வேண்டும். படிவம் பூர்த்தி செய்வதில் சந்தேகம் இருந்தால்; அலுவலர்களிடம் தெரிந்து வாக்காளர்கள் சரியாக பூர்த்தி செய்திட வேண்டுமென தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, கடலாடி மற்றும் சாயல்குடியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களுக்கு கணக்கீடு படிவம் வழங்கி வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் மீண்டும் சென்று பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை வாக்காளர்களிடமிருந்து மீள பெறுவதுடன் வாக்காள ர்களுக்கு உரிய ஒப்புகை சீட்டு வழங்கிட வேண்டுமென அறிவுறுத்தினார்.

மேலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், கண்காணிப்பு அலுவலர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு தேவையான வழிகாட்டுதலை மேற்கொண்டு கணக்கீட்டு படிவங்கள் அமைத்து வாக்காளர்களுக்கும் கிடைத்திடும் வகையிலும் மற்றும் வழங்கப்பட்ட படிவங்கள் விரைந்து மீள பெறுவதற்கும் உறுதுணையாக இருந்து செயலாற்றிட வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலர்ஃ மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்;.

இந்த ஆய்வின்போது முதுகுளத்தூர்;; வட்டாட்சியர் கோகுல்நாத் , கடலாடி வட்டாட்சியர் பரமசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



■ இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி மாவட்ட உதவி தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் .அ.பூங்கோதை விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் பட்டியல் கணக்கீட்டு படிவத்தினை திரும்பபெற்று, டிஜிட்டல் முறையில் பதிவேற்றம் செய்யப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு வட்டம், உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மாநகராட்சி ஆணையாளர் .சித்ரா விஜயன் உடன் உள்ளார்.




## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு பேரணியை வாக்காளர் பதிவு அ லுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன் தொடங்கி வைத்தார்

தேனி, நவ.14-

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு பேரணியை வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன் தொடங்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் நடைமுறைக்கு வரப்பெற்று, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் 04.11.2025 முதல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இல்லம் தோறும் சென்று, கணக்கெடுப்புப் படிவம் விநியோகம் செய்யப்பட்டு, சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் விழிப்புணர்வு பேரணியியை வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் தொடங்கி வைத்தார்.

இப்பேரணியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான பதாகைகளை மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஏந்திசென்று, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இப்பேரணி காமராஜர் பேருந்து முனையத்தில் தொடங்கி, தேனி அல்லிநகரம் நகராட்சி அலுவலகம் வரை சென்று நிறைவு பெற்றது. இப்பேரணியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எஸ்.பி.ஜ. அலுவலர் குடியிருப்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர முறைத் திருத்தம் 2026 தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுகளுக்கு சென்று வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார். மாநகராட்சி ஆணையாளர் .சித்ரா விஜயன் உடன் உள்ளார்.




# வேலூர் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி

வேலூர், நவ.14-

வேலூர் மாவட்டம், கீ. வ. குப்பம் தாலூகா, தேவரிசிக் குப்பம் ஊராட்சியில் கடந்த (12.11.2025) மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மத்திய மற்றும் மாநில தமிழ்நாடு அரசின் சாதனை விளக்கப் புகைப்பட கண்காட்சி யினை பொதுமக்கள் பார்வையிட்டனர். இதில் துணை தலைவர் பிரபாவதி ரமேஷ்குமார், ஊராட்சி செயலாளர் ஞானசேகரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பார்வையிட்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி லீடர்ஸ் ஸ்கூல் பின்புறம் அமைந்துள்ள பிரதான சாலையில் கனரக வாகனங்களும் இருசக்கர வாகனங்களும் நான்கு சக்கர வாகனங்களும் பள்ளி வாகனங்களும் செல்வதால் அந்த சாலை பழுதடைந்து காணப்படுகிறது லீடர்ஸ் கோளிலிருந்து பிரபு நகர் செல்லப்பா நகர் சொக்கலிங்க நகர் கருப்பர் கோவில் வரை அந்த சாலை அமைந்துள்ளது இது முக்கிய சாலையாக கருதப்படுகிறது பொதுமக்கள் இதன் வழியாக பள்ளிக்கு அழைத்துச் செல்வதும் நகரின் முக்கிய பகுதிகளுக்கு செல்வதுமாக இருசக்கர வாகனங்கள் செல்கின்றனர் அந்த பாதை குண்டும் குழியுமாக வாகனங்கள் செல்ல முடியாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் இதை காரைக்குடி மாநகராட்சி நிர்வாகம் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்?



# வேலூர் அடுத்த காங்கேயநல்லூரில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் 32-ம் குருபூஜை விழா

வேலூர், நவ.13-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காங்கய நல்லூரில் திரு முருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் 32ம் ஆண்டு குருபூஜை விழாவினை முன்னிட்டு காங்கேயநல்லூர் வாரியார் ஞான திருவளாகத்தில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தலைவர் கே.பி.கே.செல்வராஜ் தலைமையிலும், சென்னை ஹோட்டல் சரவணபவன் அதிபர் ராஜகோபால் அண்ணாச்சி குடும்பத்தினர்கள் மற்றும் திருப்புகழனார் ஆகியோர் முன்னிலையிலும் சுவாமிகளின் திருவுரு சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த குருபூஜை விழா வரவேற்பு குழுவினர்கள் மண்டல தலைவர், மற்றும் மாவட்டத் தலைவர் சி.என்.தட்சிணா மூர்த்தி, மாவட்ட செயலாளர் எம்.ரவி, மாவட்ட பொருளாளர் எம். சுதாகர், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் மார்கபந்து, துரைகண்ணு, சுப்பிரமணி, மோகனராமன் நகரத் தலைவர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் கருணாகரன், ஜோதி கைலாசம், வி.எம்.கே பூபாலன், கே எம் ஜி கல்லூரி ராஜேந்திரன், மற்றும் வேலூர் மாவட்ட மகாஜன செங்குந்த சங்கம் நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள், விழா குழுவினர்கள் பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.







# தாராபுரத்தில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் - 700க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

திருப்பூர், நவ.14-

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில், இந்திய தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள *"சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி" (Special Intensive Revision - SIR) யை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திமுக கிழக்கு மாவட்டம் சார்பில், மாவட்ட பொறுப்பாளர் இ.ல. பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. நகர்மன்ற தலைவர் பாப்புகண்ணன் மற்றும் நகரச் செயலாளர் முருகானந்தம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். தாராபுரம் பழைய நகராட்சி அலுவலகம் எதிரே, சர்ச் வீதியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், 700க்கும் மேற்பட்டோர் உற்சாகமாக பங்கேற்றனர். திமுக சார்பில், இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் இந்த "SIR" நடவடிக்கை, அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டதுடன், லட்சக் கணக்கான உண்மையான வாக்காள ர்களின் பெயர் களை பட்டியலிலிருந்து நீக்க வழிவகுக்கும் எனவும், இதனால் சிறுபான்மையினர் மற்றும் பட்டியல் சமூக மக்களின் வாக்குரிமை பறிக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

திமுக ஏற்கனவே இந்த 'SIR' நடைமுறைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனு மீதான விசாரணை இன்று (நவம்பர் 11, 2025) நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ள காங்கிரஸ், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியவற்றின் நிர்வாகிகளும் செயற்பா ட்டாளர்களும் பங்கேற்றனர்.

தாராபுரம் முழுவதும் இந்த ஆர்ப்பாட்டம் பெரும் கவனத்தை ஈர்த்தது. போலீஸ் பாதுகாப்பு வலுவாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.



# காரைக்குடி KVS நகர் மூன்றாவது வீதியில் சாலையில் வீட்டு கழிவு நீரை விடுவதால் பலர் காய்ச்சல் ஏற்பட்டு சிகிச்சைக்கு பின் வீடு திரும்பி உள்ளனர்

சிவகங்கை, நவ.14-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனிவாசல் பாண்டியன் நகர் அருகில் உள்ள KVS நகர் மூன்றாவது வீதியில் பலகுடியிருப்புக்கள் உள்ளன.இந்நிலை யில்அப்பகுதில் வீட்டு கழிவு நீர் தொட்டி நிரம்பி விட்டதால் அந்த நீரை அகற்றி சுத்தம் செய்யாமல் வீட்டு கழிவு நீரை சாலையில் விடுகின்றனர். அந்த கழிவுநீர் அருகில் உள்ள வீட்டு வாசலில் தேங்கி அதில் உள்ள கொசுக்களால், காளாரா,மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவிகின்றன.அருகில் வசிக்கும் சிறுவர்கள், பெரியவர்கள் காய்ச்சலால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பி உள்ளனர்.அப்பகுதியில் யுள்ள சிறுவர்கள் பள்ளிக்கு செல்லுவது மிகவும் சிரமத்திற்கு யுள்ளாகின்றனர். இதனால் அப்பகுதி மக்கள் பலமுறை சங்கராபுரம் ஊராட்சி அலுவலகம் காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் புகார் அளித்தும் இதற்கான தீர்வு தற்போது வரை கிடைக்கவில்லை என்பதை நிதர்சனமான உண்மை.

## வயலூரில் சூறைக்காற்றுடன் கனமழை

# பழனியை அடுத்த வயலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சூறைக்காற்றுடன் பெய்த மழையால் மக்கள் பெரும் அவதி

திண்டுக்கல், நவ.14-

திண்டுக்கல் மாவட்டத்துக்கு கனமழை அறிவித்த நிலையில் பழனியில் கடந்த இரு நாட்களாக கடும் மேகமூட்டம் மட்டுமே இருந்தது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை பழனியை அடுத்த வயலூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சாமிநாதபுரம், ஜிவிஜி நகர், மேட்டுப்பட்டி பகுதிகளில் பலத்த சூறைக்காற்றுடன் மழை பெய்தது. இதனால் வேலைக்கு சென்றவர்களும், பள்ளிகளுக்கு சென்றவர்களும் வீடு திரும்பவதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. வயலூர் சுற்றுவட்டார பகுதிகள் ஆலைகள் நிறைந்த பகுதி என்பதால் பல ஆலைகளுக்கும் மழை நீர் புகுந்தது. சாத்தூர் வெங்கடேஸ்வரா காகித ஆலையில் மழை மற்றும் மழைநீர் புகுந்ததால் சுமார் 50 டன் முதல் 100 டன் எடையிலான புதிய காகித பண்டல்கள் முற்றிலும் சேதமடைந்தது. இந்த மழையால் விவசாய நிலங்கள் பயனடைந்தன.

# சபரிமலையில் மண்டல பூஜைக்கு நடைதிறப்பு: தூய்மைபணியில் ஈடுபட 1125 தொழிலாளர்கள் ஐயப்ப சேவாசங்கம் ஏற்பாடு

மதுரை, நவ.14-

சபரிமலையில் மண்டலகால பூஜைக்காக நவம்பர் 16ஆம் தேதி நடை திறக்கப்படுவதையொட்டி தூய்மை பணியில் ஈடுபட 1125 தொழிலாளர்களை அகில பாரத ஐயப்ப சேவாசங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

சபரிமலையில் கார்த் திகை மாதம் ஒன்றாம் தேதி மண்டல கால பூஜைக்காக நடை திறக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டு மண்டலகால பூஜை நாட்களில் சன்னி தானம், பம்பா, எருமேலி, பந்தளம் பகுதிகளில் துப்புரவு பணி க்காக 1125 தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சபரிமலை சுகாதார சங்கத்தின் கீழ் இந்த தொழிலாளர்கள் வேலை செய்ய உள்ளனர். பந்தனம் திட்டா கோட்டாட்சியர் வேண்டு கோளின்படி சன்னி தானம், பம்பா, நில க்கல், எரிமேலி, பந்தளம் பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள



1000 தூய்மைப் பணியாள ர்களும், கோட்டையம் மாவட்ட ஆட்சியர் வேண்டு கோளின்படி எரிமேலியில் பணிபுரிய 125 தூய்மைப் பணியாளர்களும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

பந்தனம்திட்டா கோட்டையம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேண்டுகோளின்படி அகில பாரத ஐயப்ப சேவா சங்க தமிழ் மாநில அமைப்பின் சார்பில் மதுரை, சேலம் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் தேர்வு செய்யப்பட்டு துப்புரவு பணிக்காக அனுப்பப்ப




ட்டுள்ளனர் என ஐயப்ப சேவாசங்க தமிழ் மாநிலத் தலைவர் மு.விஸ்வநாதன் தெரிவித்துள்ளார். இந்த தூய்மை பணியாளர்கள் மேற்படி பகுதிகளில் 24 மணி நேரமும் சுழற்சி முறை யில் பணியாற் றுவார்கள். கடந்த காலங் களில் தமிழ் மாநில அமைப்பின் சார்பில் அனுப்பப்பட்ட பணியாளர்கள் எந்தவித குறை யுமின்றி நேர்மையாக பணியாற் றியத ற்காக சபரி மலை சுகாதார சங்கத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியா ளர்கள் பாராட்டு தெரி வித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# கோவாவில் நடந்த தேசிய அளவிலான கராத்தே போட்டியில் 36 பதக்கம் வென்று திரும்பிய வீரர்களுக்கு சென்னை விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு

## அரசு பள்ளி மாணவர்களுக்கு கராத்தே பயிற்சியை பாட வகுப்பில் சேர்க்க வலியுறுத்தல்

மீனம்பாக்கம், நவ.14-

கோவாவில் தேசிய அளவிலான ஒபன் காரத்தே சாம்பியன் ஷிப் போட்டி நவம்பர் 8 மற்றும் 9ம்தேதி நடைப்பெற்றது. இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் இருந்து சென்னை, காஞ் சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணமாலை ஆகிய மாவட்டத்தை சேர்ந்த 18 கராத்தே வீரர்கள் போட்டியில் கலந்து கொண்டனர்.

இதில் சுமார் 45 பிரிவுகளில் கலந்து கொண்ட தமிழகத்தை சேர்ந்த 18 மாணவர்கள் ஒன்பது தங்க பத்தக்கம் 16 வெள்ளி பதக்கம், 11 வெண்கல பதக்கம் என 11 என மொத்தம் 36 பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர்.

இதில் திருவண்ணா மலையை சேர்ந்த மதுவினி, பி.ஹரினி, சோமேஷ்ராஜ் ஆகிய 3 அரசு பள்ளி மாணவர்களும் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

சாதனை படைத்து திரும்பிய மாணவர்களுக்கு ஹகுரியு ஸ்போர்ட்ஸ் கராத்தே டோ அசோசியேஷன் தலைவர் பிரபாகரன் மற்றும் நிர்வாகி நாகராஜன் ஆகியோர் சால்வை அணிவித்து பாராட்டுகளை தெரி வித்தனர்.

போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில், அரசு பள்ளி மாணவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கினால் இன்னும் சிறப்பாக வெற்றி பெறமுடியும் எனவும், கராத்தே பயிற்சியை அரசு பள்ளிகளில் பாடமாக கொண்டு வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்ததனர்.

# தாம்பரத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சர்தார் 150 ஒற்றுமை யாத்திரை என்ற தலைப்பில் போதை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

தாம்பரம், நவ.14-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, சர்தார் 150 ஒற்றுமை யாத்திரை என்ற தலைப்பில் போதை விழிப்புணர்வு பேரணி மாவட்ட இளைஞர் அணி தலைவர் செல்வ முத்துக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்த பேரணிக்கு, செங்கல்பட்டு மாவட்ட தலைவர் சிங்கை ரகுராமன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தேசியக் கொடியை ஏற்றி, பேரணியைத் தொடங்கி வைத்தார்.




இந்த விழிப்புணர்வு பேரணி தாம்பரம் வித்யா திரையரங்கம் அருகில் இருந்து துவங்கி, முத்துரங்க முதலியார் சாலை வழியாகச் சென்று, சண்முகம் சாலையில் நிறைவடைந்தது.

போதைப்பொருள் பழக்கத்தால் சமூகம் எதிர்கொள்ளும் பாதிப்புகளை உணர்த்தும் நோக்கில், இளைஞர்கள், மாணவர்கள், மற்றும் சமூகப் பிரமுகர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பினர்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மண்டல தலை வர்கள், அணி மற்றும் பிரிவு நிர்வாகிகள் பெருமளவில் பங்கேற்றனர். மேலும் பல பள்ளிகளின் மாணவ, மாணவிகளும் ஒற்றுமை மற்றும் போதைவிலக்கு விழிப்புணர்வை வலியுறு த்தும் பலகைகள் ஏந்தி பேரணி யில் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும் ஒற்றுமை, ஒழுக்கம், மற்றும் நலனுக்காக பாடுபட்ட சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் சேவையை நினைவுகூரும் வகையில் நடைபெற்ற இந்த ஒற்றுமை யாத்திரை தாம்பரத்தில் பெரும் மக்களின் ஆதரவுடன் சிறப்பாக நிறைவு பெற்றது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161